'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலைமுரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்னைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு.

1978 மார்ச் 6] *[பேரவைத் தலைவர்]*

பத்திரிகைகள், நடவடிக்கைக் குறிப்புகளை முழுவதும் வெளியிட முடியாது என்பதையும் ஆனால் மையக் கருத்துக்கள் மாறாமல் கூடியவரை எல்லா நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவது தான் நல்லது என்றும் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளேன். அதை மீண்டும் வலியுறுத்தி, அவைநிகழ்ச்சிகளை வெளியிடும்போது இம்மாதிரி தவறுகள் நேராவண்ணம் பார்த்துக்கொள்வது அவசியம் என்றும், இடநெருக்கடியைக் காரணம் காட்டி ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு விட்டு அதையொட்டிய பகுதிகளை வெளியிடாது இருப்பது சில சமயங்களில் தவறான கருத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இனிமேல் இம்மாதிரி நிகழா வண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, அவை உரிமை குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை மீதான பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1—3—1978 அன்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் பேரவையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையை கொண்டு வந்தார். அப்பத்திரிகை 15—2—1978 அன்று வெளியிட்ட ஒரு செய்தி குறித்துப் பேரவையில் 23—2—1978 அன்று திரு. உமாநாத் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினர். அதற்கு நான் 28—2—1978 அன்று எனது தீர்ப்பை அளித்தேன். 1—3—1978 அன்று இது குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தியில் எனது தீர்ப்பு முழுவதும் வெளியிடப்பெறவில்லை என்றும் அப்பத்திரிகை எழுதிய கடிதத்தின் வருத்தம் தெரிவிக்கும் பகுதியும், இனி இவ்விதம் நிகழாது என்று உறுதி அளித்தப் பகுதியும் எனது தீர்ப்பில் நான் கொடுத்த எச்சரிக்கைப் பகுதியும் விடுபட்டுள்ளன என்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்டது என்றும், எனவே இது அவை உரிமையை மீறிய செயல் என்றும் திரு. உமாநாத் குறிப்பிட்டார்.

இம்மாதிரி தீர்ப்பின் முக்கிய பகுதிகளை வெளியிடாததும் அவர்களே எழுதிய கடிதத்தின் பகுதிகளை மறைத்து செய்தி வெளியிட்டதும் தவறான செயலாகும். தவறான செய்தி ஒன்றினை வெளியிட்டு அது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டு தீர்ப்பு வழங்கியபின், அத்தீர்ப்பையும் அம்மாதிரி தவறாக வெளியிட்டதற்கான வருத்தத்தையும் முதலில் வெளியிட்ட செய்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டதோ அதே அளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படவேண்டும். இதுதான் மரபு. எனவே, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் இவ்வாறு செய்யாதது தவறானது.

ஆயினும், 2-3-1978 தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் எனது முந்திய தீர்ப்பையும் தாங்கள் முதலில் எழுதிய கடிதத்தையும் முழுவதுமாக வெளியிட்டுள்ளார்கள். எனவே, இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இனி இவ்வாறு நிகழாவண்ணம் அப்பத்திரிகை எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்று 6 தேதி ஆகியும் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் எங்களது சம்பளத்தை வாங்கவில்லை. மேலும் பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். காலவரையறையின்றி என்.ஜி.ஓ. க்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இன்னும் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(5) ஒத்திவைப்பு தீர்மானம்.

(அ) அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை